FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319470

1. District : Madurai PS: VMAE Year 2026 FIR No. 8/26 Date: 04.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment Act) 2018 and BNSS Act Sections பிரிவுகள்: 7 & 9 PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 106 BNSS Act

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 16.00 hrs Date to : 03.07.2026 22.30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 07.20 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 04.07.2026 Time : 14.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நேட்டுக்கு வெய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கீமீ தென் கிழக்கு

Beat Number : (b) Address : பொன்னமல்லபுரம், உலகநாச்சியம்மன் கோவில் அருகில், திருப்பரங்குன்றம், மதுரை
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Thi. P. இதய அருள்மணி (b) Father's/ Husband's Name : பழனி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : வயது 54 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தினை அய்வாளர் (g) Address : மாவட்ட ஆய்வகத்தில் அலுவலகம் மதுரை
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. T. மலைச்சாமி வயது 57 / 2026, கீ.பி.எம். தெரு இராமலிங்கபுரம் (அருகில் மளிகைக் கடை) உலகநாச்சியம்மன் கோவில் அருகில், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் மற்றும் 8 நபர்கள் மீது தக்கதாக்கல் செய்யப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets attached
(Pages 3 to 15)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04.07.2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

T. SURIYAKALA

15 Date & Time of despatch to the court: 04.07.2026 16.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை Inspector of Police
VGR, Madurai

இணைப்பு - I

குற்றவாளிகள்

A-2 திரு. R. ஜீவானந்தம், வயது 52/2026,
த/பெ. ராஜு,
அரசு வாகன ஓட்டுநர்,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

A-3 திரு. S. பாலமுருகன், வயது 56/2026,
த/பெ. சுப்பையா,
ஓவர்சீயர்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

A-4 திரு. R. ராஜேஷ்கண்ணா, வயது 50/2026,
த/பெ. ராமகிருஷ்ணன்,
சாலை ஆய்வாளர்,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

A-5 திரு. V. நாகராஜன், வயது 51/2026,
க/பெ. வாசு,
ஊராட்சி செயலாளர், விருசங்குளம்,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

A-6 திருமதி. மு. மலர்விழி, வயது 47/2026,
க/பெ. வேல்முருகன்,
ஊராட்சி செயலாளர், கரிசல்பட்டி ஊராட்சி,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

A-7 திரு. வெ. அம்மச்சிநாதன், வயது 45/2026,
த/பெ. கா. வெளியவன்,
ஆய்வாளர், உதவி இயக்குநர் அலுவலகம்
(நிதி தணிக்கை)
கனகா அப்பார்ட்மெண்ட் 2வது தளம்,
சொக்கிகுளம், மதுரை - 625 002

A-8 திருமதி. ரா. கவிதா, வயது 31/2026,
க/பெ. ரா. விக்னேஷ்,
இளநிலை உதவியாளர்,
திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
மதுரை மாவட்டம்

A-9 திருமதி. பஞ்சவர்ணம், வயது 59/2026,
க/பெ. வடமலை,
சத்துணவு அமைப்பாளர்,
அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி,
கரடிக்கல், மதுரை மாவட்டம்

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை
04.07.2026

இணைப்பு - II

Honoured Sir,

Submitted,

இன்று 04.07.2026-ம் தேதி காலை 07.20 மணிக்கு, காவல் ஆய்வாளர் த. சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. P. ஜெயஷர்மிளா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் மற்றும் மற்ற அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 03.07.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.23,500/-, கைப்பற்றப்பட்ட 11 பதிவேடுகள் மற்றும் மேற்படி அலுவலகத்தில் அலுவலில் இருந்த ஒன்பது அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி.P.ஜெயஷர்மிளா, B.Sc., துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 23/2026/I1, நாள் : 04.07.2026 அம்மா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - ஊரக வளர்ச்சித்துறை - மதுரை மாவட்டம் திருமங்கலம் மதுரை - திருமங்கலம் ரோட்டில் தியாகராசர் (பி) மில் வளாகத்திற்கு எதிரே மெயின் ரோட்டின் மேற்குபக்கம் உள்ள திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் பணியாற்றும் இளநிலை பொறியாளர் திருமதி. மாலதி மற்றும் அவரது அலுவலக பணியாளர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வரும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் பொது தேவைகளுக்காக அரசு வேலையாக வரும் நபர்களிடம் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், நேற்று 03.07.2026-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது- **ரூ.23,500/-** பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 03.07.2026-ம் தேதியன்று, மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் பொறியியல் பிரிவில்

பணியாற்றும் இளநிலை பொறியாளர் திருமதி. மாலதி மற்றும் அவரது அலுவலக பணியாளர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வரும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் பொது தேவைகளுக்காக அரசு வேலையாக வரும் நபர்களிடம் லஞ்சம் வாங்குவதாகவும், மேலும் ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், தனக்கு கீழே பணிபுரியும் அலுவலர்களிடமிருந்தும் லஞ்சப்பணத்தை அவருடைய G-pay App மூலமாகவும், அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் உள்ள வங்கி கணக்குகள் மூலமாகவும் பெறுவதாகவும், மேலும், மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களும் லஞ்சம் பெறுவதாக இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. த.சூரியகலா அவர்கள் காலை சுமார் 13:30 மணிக்கு என்னிடம் தெரிவித்தார்கள். அதன்பேரில், நான் அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து அதனை நான் உறுதி செய்துவிட்டு, நான் மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு மதியம் 14:15 மணிக்கு வந்தேன். பின்னர் மதுரை ஊ.த.க. காவல் ஆய்வாளர் திருமதி.சூரியகலா அவர்களை அழைத்துக்கொண்டு காவல் குழுவினருடன் நேற்று (03.07.2026) மதியம் சுமார் 14:30 மணிக்கு அரசு காவல் வாகனம் TN 22 G 7007 Bolero-ல் புறப்பட்டு, திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைந்துள்ள தியாகராசர் (பி) மில் அருகே மதியம் சுமார் 15:20 மணிக்கு வந்து, மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு வெளியே தெற்கு பக்கம் உள்ள பழைய கட்டடத்திற்கு அருகே நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, மாலை சுமார் 16:00 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மதுரை - திருமங்கலம் ரோட்டில் தியாகராசர் (பி) மில் வளாகத்திற்கு எதிரே மெயின் ரோட்டின் மேற்குபக்கம் தெற்கு திசை நோக்கியவாறு அமைந்த மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடத்தின் முதல் தளத்தின் கிழக்கு பகுதியில் இருந்த, பொறியியல் பிரிவு அலுவலக அறை நோக்கி சென்ற போது முதல் தளத்தின் பொறியியல் பிரிவு முன்பாக கிழக்கு பக்க வராண்டாவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த நபரிடம் நான் என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திருமதி.சூரியகலா மற்றும் திரு. குமரகுரு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து அவரைப்பற்றி விசாரித்த போது, அவரது பெயர் R. ஜீவானந்தம் என்றும், அவர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு. ஜோதிராஜ் என்பவரிடம் ஓட்டுநராக இருந்ததாகவும்,

கடந்த வாரம் திரு. ஜோதிராஜ் அவர்கள் இறந்து விட்டதால், அவரது பணியிடம் காலியாக உள்ளது என்றும், அவர் அலுவலக நேரம் என்பதால் அலுவலகத்தில் உள்ளதாலும், அவரிடம் ரூ.3,620/- உள்ளதாகவும், அதனை அவர் ஓட்டி வரும் அரசு வாகனம் TN 58 G 0209 Bolero பழுது ஏற்பட்டால் அதனை சரிசெய்வதற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்து, அவர் வசம் வைத்திருந்த ரூ.3,620/-யை **(ரூ.500/- X 7, ரூ.100/- X 1, ரூ.20/- X 1)** எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அவரிடம் விசாரித்த போது, அவர் வைத்திருந்த பணத்தில் ரூ.3,500/-க்கு **(ரூ.500/- X 7)** சரியான முகாந்திரம் கூறாததால் அதனை நான் கைப்பற்றினேன். அது போக இருந்த மீதப்பணம் ரூ.120/- அவர் வசம் ஒப்படைத்தேன். மேலும், மேற்படி திரு. ஜீவானந்தத்திற்கு சற்று தள்ளி வடக்கு பக்கம் நின்றிருந்த பின்னால் கேட்டு தெரிந்து கொண்ட திரு. பாலமுருகன் என்பவரை விசாரித்த போது, அவர் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஓவர்சீயராக பணிபுரிவதாகவும், அவரது BDO ஜோதிராஜ் இறந்துவிட்டதாகவும், காலையில் மேலக்கோட்டை, காமாட்சிபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு அவர் சென்று சாலை சர்வே பணியை செய்து விட்டு, மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகவும், மேலும் அவர் வசம் ரூ.6,100/- **(ரூ.500/- X 12, ரூ.100/- X 1)** உள்ளதாகவும், அதில் ரூ.100/- யை அவரது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாகவும், மீதமுள்ள ரூ.6,000/-த்தை அவரது இருசக்கர வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்வதற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் ரூ.6,000/- **(ரூ.500/- X 12)** எப்படி வந்தது என்பதை பற்றி விசாரித்த போது, அதற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை அதன் காரணமாக ரூ.6,000/-த்தை மட்டும் நான் கைப்பற்றினேன். மேலும், சோதனையின் போது, முதல் தளத்தில் கிழக்கு பகுதியில் பொறியியல் பிரிவு அலுவலகத்தில், அப்பிரிவின் தலைமை அலுவலர்கள் அறைகள் அமைந்துள்ள, மேற்படி பிரிவு அலுவலகத்தின் தென்கிழக்கு மூலையில் இருந்த அறையில் பணிசெய்து கொண்டிருந்த பின்னால் கேட்டு தெரிந்து கொண்ட இளநிலை பொறியாளர் திருமதி. மாலதி அவர்களிடம், நான், என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்களான திருமதி.சூரியகலா மற்றும் திரு.குமரகுரு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி பிரிவு அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்தேன். அப்போது, அவர் தனது பெயர் T. மாலதி என்றும், அவர் மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கடந்த 18.11.2025-ம் தேதி முதல்

பொறியியல் பிரிவில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவரது மணிபர்ஸில் ரூ.70/- அவரது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாகவும், அவரது செல்போன் எண். 90806 12192 என்றும், அவருக்கு SBI Vinayaga Nagar, Madurai A/c No. 30657322359, TMB, Nagamalai Pudukottai A/c No. 015100050312365, IOB Bypass Road, Madurai மற்றும் Bank of Baroda ஆகிய வங்கிகளில் வங்கி கணக்குகள் உள்ளதாகவும், அதில் SBI மற்றும் TMB வங்கி கணக்குகளை Gpay Application-ல் பயன்படுத்தி வருவதாகவும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 19 கிராம ஊராட்சிகளுக்கான பணிகளையும், மேலும் மற்றொரு உதவி பொறியாளரான திரு. நந்தகுமார் அவர்கள் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மற்ற 19 கிராம ஊராட்சிகளுக்கான பணிகளை கவனித்து வருவதாகவும், தற்போது திரு. நந்தகுமார் அவர்கள் வெளியே சென்றிருப்பதாகவும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு. தங்கபாண்டி அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றுள்ளதாகவும் தெரிவித்து, அவரது பொறியியல் பிரிவு அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தார். பின்னர் பொறியியல் பிரிவில் தென் கிழக்கு மூலையில் இளநிலை பொறியாளர் திருமதி. மாலதி அவர்களின் அறையும், அதற்கு மேற்கு பக்கம் திரு. நந்தகுமார், உதவிபொறியாளர் அறையும், அந்த இரண்டு அறைக்கு வடக்கு பக்கம் இரண்டு ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் மேற்படி திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் தரை தளம் மற்றும் முதல் தளம் முழுமையாக சோதனையிடப்பட்டது. சோதனையின் போது, திருமதி. மாலதி அவர்களை நான் சோதனையிட்ட போது, அவரது கைப்பையில் இருந்து ரூ.70/-யை எடுத்து தனது சொந்த செலவுக்கான பணம் என கூறியதால் அந்தப் பணத்தை அவரே வைத்துக்கொள்ளும்படி கூறினேன். அதனைத்தொடர்ந்து, அவரது இருக்கை மற்றும் அவருக்கு முன்புள்ள மர கேபினட் பகுதிகள் மற்றும் அந்த அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. மேலும், சந்தேகத்தின் பேரில் மேற்படி திருமதி. மாலதி அவர்களின் செல்போன் எண் 90806 12192 -ல் உள்ள Gpay Application-யை ஆய்வு செய்த போது கடந்த 01.05.2026-ம் தேதி 01.07.2026-ம் தேதி வரையிலான காலத்தில் வங்கிகளில் பணப்பரிமாற்றம் ரூ.2,55,500/- என காணப்பட்டது. அதில், அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வங்கி கணக்கிலிருந்தும் அனுப்பப்பட்டதாக தெரிய வந்தது. அது குறித்து அவரிடம் கேட்ட போது அதற்கு அவர்

சரியான முகாந்திரம் கூறவில்லை. அதனைத்தொடர்ந்து, முதல் தளத்தில் மேற்படி திருமதி. மாலதி அவர்களின் அலுவலக அறைக்கு மேற்கு பக்கம் இருந்த திரு. நந்தகுமார் அவர்களின் அலுவலக அறை முழுமையாக சோதனையிடப்பட்டது. மேலும், சோதனையின் போது, மேற்படி பொறியியல் பிரிவு அலுவலகத்தில் திருமதி. மாலதி அவர்களின் அலுவலக அறைக்கு வடக்கு பக்கம் உள்ள சாலை ஆய்வாளர் மற்றும் அலுவலர்கள் பணிபுரியும் அறையில் சேரில் அமர்ந்திருந்த பின்னர் கேட்டு தெரிந்த திரு. ராஜேஷ் கண்ணா அவர்களிடம் விசாரித்த போது, அவர் மேற்படி அலுவலகத்தில் கடந்த 2017-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும், அவர் அலுவலக பணியை வெளியில் முடித்துவிட்டு, மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகவும், அவர் வசம் ரூ.3,180/- **(ரூ.500/- X 5, ரூ.200/- X 1, ரூ.100/- X 3, ரூ.50/- X 3, ரூ.10/- X 3)** உள்ளதாகவும், அதில் ரூ.180/- தனது செலவிற்கு வைத்துள்ளதாகவும், மீதியுள்ள ரூ.3,000/-த்தை **(ரூ.500/- X 5, ரூ.200/- X 1, ரூ.100/- X 3)** அவரது வீட்டு செலவிற்கு வைத்துள்ளதாகவும், அப்பணம் நகை அடகு வைத்து கிடைத்த பணம் என்றும், அவர் பணம் கொண்டு வந்த விபரத்தை அலுவலகத்தில் உள்ள தனிநபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் ரூ.3,000/-த்திற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தால் அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், அந்த பொறியியல் பிரிவு அலுவலக அறைக்கு அடுத்து முதல் தளத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் இருந்த பின்னால் கேட்டுத்தெரிந்த நாகராஜனிடம் விசாரித்த போது, அவர் விருசங்குளம் ஊராட்சி செயலாளர் என்றும், மேற்படி அலுவலகத்திற்கு சம்பளபட்டியலில் கையொப்பம் பெறுவதற்காக வந்ததாகவும், அவரிடம் ரூ.2,150/- **(ரூ.500/- X 3, ரூ.100/- X 6, ரூ.50/- X 1)** உள்ளதாகவும் அதில் ரூ.150/-யை தனது கைச்செலவுக்காக வைத்து உள்ளதாகவும், மேலும் மீதியுள்ள பணம் விருசங்குளம் ஊராட்சியில் வசூல் செய்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் ரூ.2,000/-த்துக்கு சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் ரூ.2,000/- **(ரூ.500/- X 3, ரூ.100/- X 5)** திரு.நாகராஜன் அவர்களிடமிருந்து நான் கைப்பற்றினேன். மேலும், திரு.நாகராஜன் அவர்களுக்கு அருகில் இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் கேட்டு தெரிந்த திருமதி. மலர்விழி என்பவரை விசாரித்த போது, அவர் கரிசல்பட்டி ஊராட்சி செயலாளர் என்றும், மேற்படி அலுவலகத்திற்கு சமூக தணிக்கை தடைகள் மீதான பதில் அளிப்பதற்காக

வந்ததாகவும், அவரிடம் ரூ.1,190/- **(ரூ.200/-X1, ரூ.100/-X9, ரூ.50/- X 1, ரூ.20/- X 2)** உள்ளதாகவும் அதில் ரூ.190/-யை தனது கைச்செலவுக்காக வைத்து உள்ளதாகவும், மேலும் மீதியுள்ள பணம் தனது கணவரின் மருத்துவ செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் ரூ.1,000/-த்துக்கு சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் ரூ.1,000/-ஐ **(ரூ.200/- X 1, ரூ.100/- X 8)** திருமதி. மலர்விழி அவர்களிடமிருந்து நான் கைப்பற்றினேன். மேற்படி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் அமைந்துள்ள தணிக்கை அலுவலகத்தில் பணியில் இருந்த பின்னர் கேட்டு தெரிந்த திரு. அம்மச்சிநாதன் என்பவரிடம் விசாரித்த போது, அவர் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலம்பட்டி கிராம ஊராட்சியின் தணிக்கை பணிக்காக கடந்த 01.07.2026-ம் தேதி முதல் இன்று 03.07.2026-ம் தேதி வரை பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அதன் காரணமாக மேற்படி அலுவலகத்திற்கு வந்து, தணிக்கை பணியில் ஈடுபட்டதாகவும், அவரது சொந்த செலவிற்காக ரூ.1,200/- **(ரூ.500/-X2, ரூ.100/-X2)** வைத்திருந்ததாகவும், அதைப்பற்றிய விபரங்களை அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். அவர் பணம் ரூ.1,000/-த்திற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தால் அப்பணம் ரூ.1,000/- ஐ **(ரூ.500/- X 2)** நான் கைப்பற்றினேன். அது போக மீதப்பணம் **(ரூ.100/-X2)** அவரிடம் திரும்ப ஒப்படைத்தேன். தொடர்ந்து சோதனையின் போது, முதல் தளத்தில் மேற்கு பக்கம் அமைந்துள்ள திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் திட்டப்பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த பின்னர் கேட்டுத்தெரிந்த தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருமதி. ராஜேஸ்வரி என்பவரிடம் அறிமுகம் செய்துகொண்டு, அவரது அலுவலகத்தை சோதனையிட உள்ள விபரம் தெரிவித்து, அவரது சம்மத்தின் பேரில் சோதனையிட்ட போது, அவரது அலுவலகத்தில் வடகிழக்கு பகுதியில் இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த பின்னர் கேட்டுத்தெரிந்த திருமதி.ரா.கவிதா என்பவரிடம் விசாரித்த போது, அவர் மேற்படி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் வசம் ரூ.6,000/- **(ரூ.500/-X12)** உள்ளதாகவும், இன்று காலையில் அவர் அவரது சொந்த பணம் ரூ.3,000/-த்தை அலுவலகத்திற்கு கொண்டு வந்ததாக பணம் கையிருப்பு பதிவேட்டில் காலையில் பதிவு செய்ததாகவும், அதுபோக மீதமுள்ள

ரூ.3,000/- தனது தங்கையின் நண்பரை அலுவலகத்திற்கு வர வைத்து அவரிடமிருந்து பெற்றதாகவும், அப்பணத்தை அவர் தீபாவளி பண்டிக்கைக்காக தான் பெற்றிருந்த ரூ.12,000/-த்தை திருப்பி செலுத்துவதற்காக கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். அவர் மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூ.3,000/-த்தை மட்டும் அவர் வசம் திரும்பி கொடுக்கப்பட்டது. அது போக மீதி ரூ.3,000/-த்திற்கு **(ரூ.500/-X6)** அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணத்தை திருமதி.ரா.கவிதா அவர்களிடமிருந்து கைப்பற்றினேன். மேலும், சோதனையின் போது, மேற்படி அலுவலகத்தின் தரைதளத்தில் வடகிழக்கு மூலையில் உள்ள சத்துணவு பிரிவு அலுவலகத்தில் சேரில் அமர்ந்திருந்த பின்னர் கேட்டு தெரிந்த திருமதி. பஞ்சவர்ணம் என்பவரிடம் விசாரித்த போது, அவர் கரடிக்கல் அரசு கள்ளர் உயர் நிலை பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் மேற்படி அலுவலகத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) திருமதி.முத்து செல்வி அவர்களிடம் மாதாந்திர வரவு செலவு அறிக்கை ஒப்படைக்க வந்ததாகவும், அவரிடம் ரூ.4,650/- **(ரூ.500/-X9, ரூ.100/-X1, ரூ.50/-X1)** உள்ளதாகவும், அதனை சொந்த செலவிற்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் அதிலிருந்த ரூ.4,000/-த்திற்கு **(ரூ.500/-X8)** சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணத்தை மட்டும் நான் கைப்பற்றினேன். அதனைத்தொடர்ந்து, தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருமதி. ராஜேஸ்வரி அவர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில், பின்வரும் பதிவேடுகளின் நகல்களை அவர் ஆஜர் செய்த (1) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்களின் வருகைப்பதிவேடு. (1 முதல் 14 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), (2) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய களப் பணியாளர்கள் வருகைப்பதிவேடு (1முதல் 14 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), (3) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய களப் பணியாளர்கள் முகாம் பதிவேடு (1 முதல் 121 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), (4) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய கணிணி உதவியாளர்கள் வருகைப் பதிவேடு நகல்கள் (1 முதல் 7 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) (5) கணிணி உதவியாளர்கள் MGNREGS திட்டம் கணிணி உதவியாளர்கள் பணியாளர்கள் வருகைப்பதிவேடு (1 முதல் 7 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது), (6) அனுமதி மற்றும் தாமத வருகைப்பதிவேடு (முதல் தளம்) (03.07.2026 வரை எழுதப்பட்டுள்ளது) ஆகிய 6 ஆவணங்களையும் கைப்பற்றினேன். மேலும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சுரேஷ்பாபு அவர்களிடம் கேட்டு கொண்டதன் பேரில்,

அவர் ஆஜர் செய்த (1) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்கள் வருகைப்பதிவேடு. (1 முதல் 18 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) (2) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய களப் பணியாளர்கள் வருகைப்பதிவேடு. (1 முதல் 14 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது). (3) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய களப் பணியாளர்கள் முகாம் பதிவேடு. (1 முதல் 120 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) (4) திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய கணிணி உதவியாளர்களின் வருகைப்பதிவேடு (1 முதல் 6 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) ஆகியவற்றின் நகல்களையும் (5) திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கையிருப்பு பதிவேடு அசல் (1முதல் 22 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது) பதிவேட்டையும் ஆக மொத்தம் 5 பதிவேடுகளை நான் கைப்பற்றினேன். பின்னர் நான் மேற்படி திடீர் இணை ஆய்வு நிகழ்வுகள் சம்பந்தமாக திருமதி.T.மாலதி, திரு.R.ஜீவானந்தம், திரு.S.பாலமுருகன், திரு.R. ராஜேஷ்கண்ணா, திரு.V. நாகராஜன், திருமதி.மு.மலர்விழி, திரு.வெ.அம்மச்சிநாதன், திருமதி.ரா.கவிதா, திருமதி.பஞ்சவர்ணம் ஆகியோரது எழுத்து பூர்வமான வாக்குமூலங்களை நான் பதிவு செய்தேன். மேற்சொன்ன பதிவேடுகளின் நகல்கள் - 10, அசல் பதிவேடு - 1 மற்றும் திடீர் இணை ஆய்வின் போது தகுந்த முகாந்திரம் கூறாமல் சந்தேகப்படும்படி வைத்திருந்த பணம் லஞ்சப்பணம் என கருதி மொத்தம் **ரூ.23,500/-** ஆகியவற்றை நான் கைப்பற்றினேன். இந்த திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. மேற்படி திடீர் இணை ஆய்வு சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட குறிப்புரை 03.07.2026-ஆம் தேதி மதியம் 16:00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 22:30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்குறிப்புரையின் நகல் ஒன்று திருமதி. மாலதி அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்கான அவரது ஒப்பம் பெறப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.23,500/- ஆகியவற்றை இணைத்து, மேற்கண்ட பதிவேடுகளின் நகல்கள் - 10, அசல் பதிவேடு ஆகிய ஆவணங்கள், 9 வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் இளநிலை பொறியாளர் (ஊரக வளர்ச்சி) திருமதி. T. மாலதி மற்றும் மற்ற அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். Sd/-XXXXXX 4.7.2026 (திருமதி.P.ஜெயஷர்மிளா), துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு:

1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 03.07.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.23,500/-. 3) திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 10 நகல் மற்றும் 1 அசல் பதிவேடுகள். 4) ஒன்பது (9) வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (04.07.2026) at 07:20 hrs along with Joint Surprise Check Proceedings, dated 03.07.2026, Cash Rs. 23,500/-, Nine statements and Seized one Original Register and 10 Copies of Registers. After obtaining permission from the Superior Officers, I Registered a case in Madurai V&AC Crime No.08/2026 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 106 BNSS Act on 04.07.2026 at 14:30 hrs. Sd/- XXXXX [T.Suriyakala] Inspector of Police, V&AC, Madurai. 04.07.2026.

The original FIR along with report dated 04.07.2026 of Tmt.P.Jeyasharmila, Joint Surprise Check Proceedings Dated: 03.07.2026, Statements of 9 officials are submitted to the Hon'ble Principal District Judge, Principal District and Sessions Court, Madurai and other copies were sent to the officers concerned.

(T. SURIYAKALA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai
(04.07.2026)